சிறுமணவூர். முனிசாமி முதலியார் இயற்றிய

கலியுகச் சிந்து



இந்நூல் கிடைக்குமிடம் :—

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

41, வெங்கடராமய்யர் தெரு,

ஜி. டி. சென்னை.

சிறுமணவூர்-முனிசாமி முதலியாரவர்கள் இயற்றிய

கலியுகச் சிந்து.

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ஆதி.

பல்லவி.

காலத்தைப்பாராய் கலிகாலக்கொடுமையின்
கோலத்தைக்கேளாய்

அநுபல்லவி.

காலத்தின் கோலத்தை ஞாலத்தின் மேலோத
பாலொத்த மொழியாளே வேலொத்த விழியாளே கா

சரணங்கள்.

அரிசிபடி நாலு பணமாய்முழிக்குது
ஐயையோ ஏழைகள் புழுகாய்த்துடிக்குது
வரியெல்லாந் தலைக்குமேல் வாரண்டாய்திரிகுது
வாங்கிய கடனோதான் கோர்ட்டுக்கிழுக்குது
புலம்புதே குடிகள் பன்னிரண்டுமாதமும்
பிளக்குதே வெய்யல்
நாட்டுப்புறங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குது
நஞ்சைபுஞ்சைகளெல்லாம் பஞ்சாய்ப்பறக்குது
காடுமேடுகளெல்லாம் கட்டுதிட்டமாச்சு
காக்காய்குருவிகூட பிழைப்பதரிதாய்ப்போச்சு கா
மழையோமழையோவென மானம்பார்க்கலாச்சி
மாடுஆடுகள்பேச்சி புல்லுக்கலையலாச்சி
தரையும்வுலர்ந்துபோச்சி தண்ணீர்பன்னீராச்சி
தங்கத்தைவைத்தாலும் வட்டிகேட்கலாச்சி
முறைகெட்டுப்போச்சி தாயார்தமக்கைபோல
பெண்தேடலாச்சி
கொண்டமனைவிபேச்சு கூழுக்கலையலாச்சி
கூத்தியார்பாதத்தைக் காத்துயிருக்கலாச்சி
சொந்தப்படிப்பெல்லாம் சூத்துக்குமணையாச்சி
சொல்லும்இங்கிலீஷுக்கு நல்லபிழைப்பாச்சி கா
காட்டில்மழையாச்சி கழனிவுலர்ந்துபோச்சி
கலப்பைதாத்துக்கோலை யிரப்பிற்சொருகலாச்சி
போட்டவிதைகளெல்லாம் பொரியாய்ப்பறந்துபோச்சி
பிள்ளைகுட்டிகளெல்லாம் கஞ்சிக்கலையலாச்சி

மண்மாரியாச்சி நாட்டுப்புறங்களெல்லாம்
கண்மாரியாச்சி
இருந்தவிரைகளெல்லா மேனேவிரைத்தோமென்று
இரவும்பகலுமாக முறையிட்டிருக்கும்போது
எடுஎடுவாயிதா பிடிபிடி ஆளென்று
ஏழெட்டுபேராக வீட்டைவளைத்துக்கொண்டு
ஜப்திகளாச்சு ஆடுமாடுகளெல்லாம்
ஏலமாய்போச்சு
வீட்டுவரிவந்து வாசக்கால் தூக்குது
வியாபாரவரிவந்து சாமானைவளைக்குது
குப்பைவரிவந்து குடிசையைப்பிடுங்குது
கொளுத்தும்விள்க்குவரி கழுத்தைப்பிடிக்குது
வேடிக்கையாச்சி தட்டுமுட்டுகளெல்லாம்
வியாபாரமாச்சி
கவிதின்றுபிழைக்கவும் கேழ்வரகுமுறைக்குது
கம்புசோளங்கூட வம்புகள்செய்யுது
கூலிக்குப்போனாலும் லஞ்சங்கள்கேட்குது
கொடுத்தாலும்நாலாநாள் அடித்துத்துரத்துது கா
சீமைசீட்டிகளெல்லாம் சிரிப்பாய்சிரித்துப்போச்சி
சமுசாரிதாசியும் வேஷம்ஒன்றாய்ப்போச்சி
பெருமையாய்ப்பிழைத்தவர் பிழைப்புக்குமிழுப்பாச்சி
பொய்சாட்சிசொல்வோர்க்குக் கைமேற்காசுமாச்சு
கடைகெட்டுப்போச்சி சர்வகுலங்களும்
நடைதப்பிப்போச்சி
அந்தணர்குலத்துடன் ஆசாரம்போச்சுது
அவரவர்சாஸ்திரம் பரணைமேற்றூங்குது
பணமென்றால்பிணங்கூட வாய்கொஞ்சந்துறக்குது
பாசுபண்ணவர்பேச்சி வேலைக்குத்தொங்குது கா
தாயொப்பிவந்தாலும் சேயன்புணரலாச்சி
தம்பிதமையண்பெண்டைத் தெம்பாயிழுக்கலாச்சி
நாய்போலேவிலைமாதர் யெங்கும்பெருத்துப்போச்சி
நாயகனைப்பியே கூட்டிப்பிழைக்கலாச்சி
சுரணைகெட்டுப்போச்சி பணமேபெருமையாக
ஜாதிகள்போச்சி
பலத்தஉத்தியோகமதைப் பார்க்கமனைவியாச்சி
படுத்துயிருக்கும்போதே அடுத்துப்புணரலாச்சி

கலங்கிவேசியரெல்லாம் கண்ணீர்சொரியலாச்சி
கட்டினமனைவியை விட்டுப்பிழைக்கலாச்சி
வழிகெட்டுப்போச்சி தகப்பன்பிள்ளையுங்கூட
வழக்காடலாச்சி
பூமியில்பிழைப்பற்று காவியுடுத்தலாச்சி
பூர்ணமாய்கெஞ்சா தம் அடித்துமயங்கலாச்சி
சாமியென் றவருக்கும் பேர்கள் நிகளமாச்சு
சாம்பலைப்பூசவுந் தெரியாதவர்க்குச்சீச்சி கா
கடுகடுத்துப்பெற்ற தாயைவுதைக்கலாச்சி
கட்டினமனைவிசொல் தட்டாதிருக்கலாச்சி
கொடுத்தகடனைக்கேட்டால் கோர்ட்டைக்காட்டலாச்சி
கொஞ்சம்ஏமார்ந்தாக்கால் பஞ்சாயடிக்கலாச்சி
அஞ்சாமல்போச்சி பெரியோர்சிறியோரென்ற
அளவெல்லாம்போச்சி
அறுத்தமுண்டைகள்பிள்ளை பெற்றுவளர்க்கலாச்சி
அப்பன்ஏமாந்தாக்கால் தாயைப்புணரலாச்சி
திருட்டுப்பிள்ளைபெற்று முறித்துயெறியலாச்சி
தெய்வத்தைநினைப்பவர் லட்சத்தொருவராச்சி கா
கட்டிக்கொடுக்குமுன்னே கள்ளக்குட்டிகளாச்சி
கட்டினமூன்றுநாள் பெற்றுமுறிக்கலாச்சி
மட்டிமுண்டைகளாலே மானங்கெட்டுப்போச்சி
மாதாபிதாபேச்சு தலையைக்குனியலாச்சி
அதிகமாய்ப்போச்சி குடிசட்டிமுண்டைகள்
அணியணியாச்சி
பெண்டுகள்வியாபாரஞ் செய்துபிழைக்கலாச்சி
புருஷன்வெளுக்கக்கட்டி பினத்தித்திரியலாச்சி
சண்டைசாடிக்கெல்லாம் பணத்தையிறைக்கலாச்சி
சாமிக்குக்கொடுப்பவர் தரணியில்மருந்தாச்சி கா
பஞ்சாங்கப்படிப்பெல்லாம் பஞ்சாய்ப்பறந்துபோச்சி
பறைச்சிக்குப்பணந்தந்து சிறப்பாய்நடக்கலாச்சி
அஞ்சாமற்பறைசோற்றில் அந்தணர்விழலாச்சி
அவர்மனைவியெல்லாம் அழுதுபுலம்பலாச்சி
குலங்கெட்டுப்போச்சி அந்தணராலேயே
குடிகெட்டுப்போச்சி
துரைக்குப்பிறந்தவன்போல் டொப்பிசட்டைகளாச்சி
ஜோடும்செருப்பும்போச்சி பூட்ஸு தூக்கலாச்சி

அடுப்பங்கரையில்கூட இங்கிலீஷ்பேசலாச்சி
ஐயமார்குடிக்கவே அடிக்கொருகடையாச்சி கா
சீமைதுரைகளெல்லாங் காவியுடுத்தலாச்சி
சாதித்தமிழரெல்லாம் சட்டைமாட்டலாச்சி
காலந்தலைகீழாச்சி கருப்புங்குடியாய்ப்போச்சு
கண்டவிடங்களெல்லாம் பைபிலிறைச்சலாச்சி
வேதங்கள்போச்சி கிரிஸ்தவர்கூச்சலே
வேடிக்கையாச்சி

கோயில்குளங்களெல்லாம் குட்டிச்சுவராய்ப்போச்சி
குடியரதிகமாச்சி கடைகள்பெருத்துப்போச்சி
கிராமதேவிகளெல்லாங் கடையாய்ப்பறந்துபோச்சி
கண்டவிடத்தில்வாந்தி பேதியதிகமாச்சி கா
கலியுகநடத்தைக்குக் கடவுளுஞ்சிரிக்குது
காலத்திற்கேற்றாப்போல் மாரிகள்வருகுது
குளிருகாச்சலிற்பாதி கூண்டோடேசாய்க்குது
குந்தியிருந்தபேரை வாந்தியில்மடக்குது
பேதியிற்பாதி இப்படிமடிந்தாலும்
துள்ளுதேகூவி

இன்றைக்கிருந்தவர் நாளைக்கில்லையென்று
யார்க்குந்தெரியுமிந்த வூர்க்குந்தெரியுமிது
ஏனோகெருவங்கொண்டு வீணாகமடியுது
எண்ணிப்பார்த்தால்தினம் ஆயிரஞ்சாவுது கா
பணங்கையில்வருதென்று பொய்சாட்சிசொல்லாதே
பரதேசியேழைமேற் புலிபோலத்துள்ளாதே
மூழுவேஷம்போட்டுநீ மோசங்கள்செய்யாதே
மூச்சிவெளியேபோனால் சீச்சீபிணமாச்சே
கெருவங்கொள்ளாதே நிலையில்லாக்கமுதைநீ
கெட்டுப்போகாதே

ஊற்றையுடலைநம்பி ஒதிபோலேநிகளாதே
ஊரைப்பகைத்துக்கொண்டு வேருடன்மாளாதே
காற்றைமலைத்துக்கொண்டு கருமங்கள்தேடாதே
கலியுகச்சிந்தைநீ பழுதாகச்சொல்லாதே கா

கும்மி.

அண்ணனுக்குத்தம்பி துரோகஞ்செய்யுங்காலம் - அப்பனைப்பிள்ளை யுதைக்குங்காலம், பண்ணினநன்றி மறக்குங்காலம் - பழிபாவத்துக்கஞ்சா கலிகாலம்.

புருஷனைப்பெண்டீ ருதைக்குங்காலம்பெற்ற-பெண் ணைத்தகப்பன் புணருங்காலம், தருமநெறியை மறக்குங் காலம் கெட்ட-தருதலைக்கேற்ற கலிகாலம்.

தங்கையை அண்ணன் புணருங்காலம்ஐயா-தாயைப் பொலிந்து மடியுங்காலம், மங்கைக்குமஞ்ச ளரைக்குங் காலம் ஐயா-மானமில்லாத கலிகாலம்.

கொண்ட புருஷனைத் திட்டுங்காலம் இவள்-கூலி கொடுத்துப் புணருங்காலம், முண்டைகள்பிள்ளை பெறு குங்காலம் ஐயா-மோசத்துக்கஞ்சா கலிகாலம்.

கட்டினமாது அலையுங்கால மிவன் - காவியுடுத்தித் திரியுங்காலம், புட்டிபுட்டியாய்க் குடிக்குங்காலம் ஐயா- புருஷருக்கேற்ற கலிகாலம்.

பீயேயும் பீயெல்லும் படித்துவிட்டு ஐயா-பிழைக்க ஜீவனமில்லாமல், கையேந்திப் பூரிகள் வாங்கிப்பிழைக் கிறூர்-கலியுகக்கால மிதுவல்லவோ.

விக்கிரமாதித்தன் நாளையிலுந் தர்ம - வேதநெறி நளன் காலத்திலும், அக்கிரமமிப்படி கேட்டதில்லை யையோ-அந்தணர் வுத்தியோகஞ் செய்ததில்லை.

சொந்தபுருஷனைத் திட்டுங்கால மிவள் - சொல்லா மற்ருய்வீடு போகுங்காலம், கணவன்மனைவியையழைக்க வந்தாலவனைக்-கண்டபடியாகத் திட்டுங்காலம்.

கள்ளத்தனமாய்ப் புணர்ந்து பிள்ளைபெற்று-கண்ட விடத்தி லெறிந்துவிட்டு, நல்லசமுசாரி போலேமினுக் கியே-நாட்டைக்கெடுக்குங் கலிகாலம்.

புருஷனைப்பெண்ஜாதி திட்டுங்காலமையா-புருஷன் தலையைக் குனியுங்காலம், கணவனைச்சாட்சியாய் வைத் துக்கொண்டு யிவள்-கருத்தைப்போலே நடக்குங்காலம்.

சொந்தபெண்ஜாதிக்குப் பயந்துவிட்டுயிவன்-சொல் லாமலேரெயி லேறுங்காலம், "போனலும்போகிரு னென் றுசொல்லி பிள்ளை-பெற்றுவளர்க்குங் கலிகாலம்.

பொய்யானபத்திர மெழுதுங்காலம் சாட்சி-பூட்டியே கோர்ட்டில் கெலிக்குங்காலம், தெய்வப்பொருளைத் திரு டுங்காலமிது-தீவினைக்கஞ்சா கலிகாலம்.

அருமையறியா முரட்டுக்காலமிது-கர்மியைப்போற் றுந் திருட்டுக்காலம், சிவன்சொல்லிய வாக்கியப்படியே சோதித்துப்பார் கலிகாலகுணம்.

நொண்டிச் சிந்து.

ஆறுமாதக்கடன்காரர் அவருக்கு அண்ணனென்று வுரைக்கலாம் மார்வாடிகள், தாறுமாறாய்க் காயலார்கள் ஊரெங்குந் தானாய் வலியவந்து கடன்கொடுத்து, பத்துக்கு அஞ்சுவட்டியாம் அந்த பத்திர மெழுதுங்கூலி யதுவேறேயாம், தருமத்தின் காசிவேறேயாம் இப்படி தந்திரமா யேழைகள் வாயிலடித்து, தட்டுமுட்டு தவலை சொம்புபெட்டி முதல் தந்ததெல்லாம் வந்தமட்டும்வலித்துக்கொண்டு, வாயிலொரு கணக்குரைப்பார் கணக்கிலே வாங்கிவெகுநாளைப் போலே எழுதிடுவார், பணத்தைக்கொடுத் தனுப்புவார் வாங்கியவன் பாதிவழி போகுமுன்னே சம்மனெடுப்பார், இப்படி யிவர்களெழுவாம்-நாட்டுகளில்-ஈட்டிக்காரர் கோறுமை கேட்கப்பயமாம்,சைதாப்பேட்டை துண்டுகளையும் - வைகுண்டசல்லாப்போற் கந்தைகளை வாரிக்கொண்டு, வலைபோல் புடவைகளையும் கவைக்குதவா டாமேஜி துண்டுகளையும் கிழித்துக்கொண்டு, செம்மண்ணும் பவுடர்களும்-நல்ல-சேருபோலே கரைத்துத் தோய்த்துக்கொண்டு, கஞ்சியிலே போட்டுப்பிழிந்து-கந்தைகளைக்-கருவாடுபோ லுலர்த்தி மடித்துக்கொண்டு, நாட்டுப்புறங் காடுமேடெல்லாம் கும்பலாய் நாலைந்துபேராக நுழைந்திடுவார், நெல்லூருவேஷ்டிகளென்பார்-நூலெல்லாம்-நேராகசீமைசாயம்போகாதென்பார், மதுரைப்புடவைகளென்பார்-இது-மாட்டுத்தோலைப்போலிருக்கும் கிழியாதென்பார், கடனுக்குத் தருவோமென்பார் - நித்தியம் - காலணாவிழுக்காடு கொடுங்களென்பார், தெரியாமற் கடனெடுத்தால்-தெருவாசற்படியில்படுத்து காறி முழிவார், கொடுத்தகடனைக் கேட்பார் அவர் குந்தினயிடத்தைவிட்டசையமாட்டார்,சூனியங்கள் வைப்போமென்பார்-ஆடுமாடு-சுருண்டிடும் ஏவலிதோ செய்கிறோமென்பார் தந்தினம் தனதனனம்.

கடன் பத்திரம்.

உலகமறியாத-ஹு ஒருவருங்காணாத-மீ ஒருநாளுமில்லாத தேதியில் ஊரிலில்லா வூரிலிருக்கும் தலைகாய்ந்த தாண்டவராய முதலியார் குமாரன் சனியன்பிடித்த சாம்பசதாசிவ முதலியாருக்கு சரிப்படாத ஊரிலிருக்கும் பித்தம் பிடித்த பேயாண்டிசெட்டியார் குமாரன் பேரில்லாதவன் புரட்டி யெழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன்பத்திரமாவதென்னவென்றால், இப்பவும் என்னுடைய வீட்டிற்கு கிழக்கு அவனுடைய வீட்டிற்கு மேற்கு அவனுடைய வீட்டிற்கு வடக்கு இவனுடைய வீட்டிற்குதெற்கு இந்த நாற்பங்கெல்லைக் குட்பட நிச்சயித்து சென்னப்பட்டணம் சிலாமணிராசி கும்பினி ரூபாய்-500 இந்த ரூபாய் ஐந்நூறுக்கு மாதம் 1-க்கு ரூபா 100-க்கு வட்டி ரூபா ஒன்றாக ஏறியவட்டியும் முதலும் தாங்கள் வேண்டாத போது நான் கொடுக்காமற் போகக்கடவேனாகவும், ஒருசமயம் அப்படிக்குக் கொடுக்கும்படிக்கு அப்பியந்தப்பட்டால் தாங்கள் எந்த கோர்ட்டிலாவது போட்டு கோர்ட்டுக்குச் செலவில்லாமல் அசல் பூஜியமாய்ப்போகக்கடவீராகவும், இப்படிக்கு என்னுடைய மனோராஜியில் சம்மதித்து எழுதிக்கொடுத்த குதுவையில்லாத கடன் பத்திரம். இதற்கு சாக்ஷி: இவனோ அவனோ எழுதினவனேவனோ.

கையெழுத்து: நடுவீதி நாராயணன்.

கலிகாலக் கண்ணாடி.

தகப்பனுக்கு மகனுறவு பழக்குங்காலம்
தமயனுக்குத் தம்பிபுத்தி சொல்லுங்காலம்
குருக்களிருந் தாசனத்தி லிருக்குங்காலம்
கொடுத்தகடன் கேட்பவரை யுதைக்குங்காலம்
வலக்கைபிடித் தரசாணி சுற்றிவந்த
மார்பிள்ளையை மருந்திட்டுக் கொல்லுங்காலம்
கணக்கருக்கு அடிவழக்கு பேசுங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே
வாய்வேக மாகரயில் ஓடுங்காலம்
வாய்பேச்சு தந்திவழி பேசுங்காலம்
தாய்பேச்சு பிள்ளைகட்கு விஷமாகுங்காலம்
தன்மனைவி மனதின்போல் நடக்குங்காலம்
நாய்போலே விலைமாதர் பெருத்தகாலம்
நம்பினோமென்றவரை கெடுக்குங்காலம்
காதலெனும் மனையாளை வணங்குங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே
மூண்டைச்சிகள் சந்துசந்தாய் திரியுங்காலம்
மூகங்காட்டி மூசுண்டை பரிக்குங்காலம்
தங்கைதனைத் தமையன்பெண் டாளுங்காலம்
தமையன்பெண்டைத் தம்பிசிறை யெடுக்குங்காலம்
பருவப்பெண் திண்ணைமேல் வுட்காருங்காலம்
பரிகாச வார்த்தைதனைப் பேசுங்காலம்
கருவழிக்க மருந்திட்டுக் கொல்லுங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே
மாமனையே மருமகளும் புணருங்காலம்
மாமியார் மருமகனை மருவுங்காலம்
பெற்றவளும் பிள்ளைதனைச் சேருங்காலம்
பெண்ணவளுந் தகப்பனையே பிணையுங்காலம்
தன்மனைவி திலோர்த்தமைபோ லிருக்குங்காலம்
தடியர்களும் சந்துசந்தாய்த் திரியுங்காலம்
காமமெனும் கருங்கடலில் மூழ்குங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே
சங்கையற்றுத் திண்ணைமேல் வுட்காருங்காலம்
சமுசாரி என்றபேர் நீளுங்காலம்

கொங்கைதனைக்காட்டியே அழைக்குங்காலம்
கொழுந்தனுடன் ஆசைவைத்துப் பேசுங்காலம்
பாட்டிகளைப் பேரன்பெண் டாளுங்காலம்
பாலகனைப் பெற்றுதா லாட்டுங்காலம்
கண்காட்டி கைகாட்டி அழைக்குங்காலம்
கலிகாலமாமிந்தக் காலந்தானே
பிள்ளைபெற்று ஆற்ருரம் போடலாச்சு
புருஷனடித்தால் விரையை பிடிக்கலாச்சு
கணவனையே மத்தாலே அடிக்கலாச்சு
களிப்புடனே தாய்வீடு போகலாச்சு
பெண்ணவளும் பிரியம்போல் நடக்கலாச்சு
பெற்றவளுங் கூட்டியே கொடுக்கலாச்சு
கண்ணன் துணை யென்பதையே மறக்கலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே
அவுசாரி உலகத்தில் அனேகமாச்சு
அன்ன நடை தாசிகட்கு அமைப்பும்போச்சு
புவிமீதில் கவிவாணர் பிழைப்பும்போச்சு
புத்தியில்லா மடையருக்கே காலமாச்சு
பருவப்பெண் பாட்டுகளும் பாடலாச்சு
பழுத்தகிழ மாப்பிள்ளையைப் புணரலாச்சு
கருத்தறியாப் புலவர்களும் பெருக்கலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே
முண்டைகளும் புருஷனையே தேடலாச்சு
முகமினுக்கி கண்டபடி திரியலாச்சு
அண்டைவீட்டு மன்னர்களைக் கெடுக்கலாச்சு
அடுத்தவரை அன்றைக்கே கொல்லலாச்சு
கொண்டைக்கு மினுக்கெண்ணே பூசலாச்சு
கொழுந்தனுக்குப் பிள்ளைபெற்று வளர்க்கலாச்சு
கன்னியர்கள் கண்டவரைப் புணரலாச்சு
கலிகாலமாமிந்தக் காலந்தானே

கலியுகச் சிந்து முற்றிற்று.

இதன் தொடர்ச்சி கலியுக சமாதானத்தில் பார்க்கவும்.

திருமகள் விலாச அச்சியந்திரசாலை, சென்னை:—1938.